

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கட்கிழமை 15.12.2025

# வெல்லும் தமிழ்ப் பெண்கள்!

**கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தை விரிவாக்கி உள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இதுவரை ஒரு கோடியே 13 லட்சத்து 75 ஆயிரத்து 492 பேர் உரிமைத் தொகை பெற்று வந்தார்கள். 16 லட்சத்து 94 ஆயிரத்து 339 பேருக்கு விரிவாக்கம் செய்துள்ளார் முதலமைச்சர். இனி மொத்தம் ஒரு கோடியே 30 லட்சத்து 69 ஆயிரத்து 831 பேர் பெறப் போகிறார்கள்.**

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் விதையாய் மாறி, 10 மாநிலங்களில் விருட்சமாக எழுந்து நிற்கிறது.

கர்நாடகாவில் கிரகலட்சுமி என்ற பெயரிலும், மத்தியப் பிரதேசத்தில் முதல்வர் லட்லி பெஹ்னா யோஜனா என்ற பெயரிலும், மகாராஷ்டிராவில் முதல்வர் லாட்கி பாஹின் யோஜனா எனவும், ஒடிசாவில் சுபத்ரா யோஜனா என்ற பெயரிலும், ஜார்க்கண்டில் மைய சம்மன் யோஜனா என்ற பெயரிலும், இமாசலப் பிரதேசத்தில் இந்திரா காந்தி பியாரி பெஹ்னா சுக் சம்மன் நிதி யோஜனா என்ற பெயரிலும், சத்தீஷ்கரில் மஹ்தாரி வந்தன் யோஜனா என்ற பெயரிலும், மேற்கு வங்காளத்தில் லட்சுமி பந்தர் என்ற பெயரிலும், சிக்கிமில் சிக்கிம் ஆமா யோஜனா என்ற பெயரிலும், புதுச்சேரியில் மகளிர் உதவித் தொகை என்ற பெயரிலும், மகளிர் உரிமைத் தொகை திட்டம் 10 மாநிலங்களில் இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

மகாராஷ்டிரா மாநிலத்தில் 15 லட்சம் பேரை இத்திட்டத்தில் இருந்து நீக்கினார்கள். அதுபோலத் தமிழ்நாடு யாரையும் நீக்காமல், விடுபட்டவர்களையும் சேர்த்தது. இதுதான் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சிறப்பு ஆகும்.

தமிழ்நாடு முழுவதும் 10 ஆயிரம், 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்களை நடத்தி கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்துக்கு விண்ணப்பங்களை கேட்டுப் பெற்றது திராவிட மாடல் அரசு. அதில் இருந்து மகளிர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள்.

இது அந்தப் பெண்களின் வாழ்வாதாரத்திற்கும் மட்டுமல்ல, அவர்களைச் சுற்றியிருக்கும் பகுதியின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் உதவுகிறது. குறிப்பாகக் கிராம பொருளாதாரம் இதன் மூலம் தன்னிறைவு பெறுகிறது. உதவித் தொகை பெறும் பெண்கள் அதனைத் தங்கள் தேவைகளுக்குச் செலவிடும் போது அந்தப் பணம் கடைகள் வழியாகச் சென்றடைந்து பொருளாதார வளர்ச்சிக்குப் பலன் அளிக்கிறது.

சொந்தக் காலில் பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்ள, மகளிர் உரிமைத் தொகை, விடியல் பயணம், சுய உதவிக்குழு, புதுமைப்பெண் போன்ற திட்டங்களைச் செயல்படுத்தி, பெண்களின் பொருளாதாரத்தை உயர்த்தி வருகிறது.

அரசின் இலவசத் திட்டங்களோடு பெண்களையும் ஒப்பிட்டு, அருவருக்கத் தக்கக் கருத்தை வெளியிட்டார் அ.தி.மு.க.வின் முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம். தமிழ்நாடு அரசு பெண்களுக்கு வழங்கும் தொகையைப் பிச்சை போடுவதாகச் சொல்லி கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறும் பெண்களை பா.ஜ.க. நடிகை குஷ்பு இழிவுபடுத்தினார். பா.ம.க.வின் சவுமியா அன்புமணி, 'உங்க 1000 ரூபாய் யாருக்கு வேணும்?' எனக் கேவலமாகப் பேசினார்.

புதிதாகக் கட்சி ஆரம்பித்திருப்பவர்களும் (த.வெ.க.) மகளிர் உரிமைத் தொகையை நிறுத்த வேண்டும் எனப் பேசுகிறார்கள். ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனோ அரசு வழங்கும் நிவாரணத் தொகையைக் கேலி செய்தார். "வெள்ளம் வந்தால், வீடு இடிந்து விழுந்தால் 500, 1000 எனத் தருகிறார்கள். இத்தகைய நடவடிக்கையால் நாடு முன்னேறாது. எப்போது பார்த்தாலும் இன்னொருவர் போடும் பிச்சையில் நாம் வாழத் தேவையில்லை" என்றார்.

மகளிர் உரிமைத் தொகை தங்கள் மாநிலங்களில் அமல்படுத்தும் பா.ஜ.க.வினர் கூட தமிழ்நாட்டில் அந்தத் திட்டத்தை எதிர்க்கிறார்கள். இவர்களின் குணமும் நிறமும் ஒன்றுதான். இவர்கள் ஒன்றாகக் கூட்டணி சேர்ந்து, தி.மு.க.வை எதிர்க்கவில்லை. ஒட்டுமொத்தப் பெண்களின் நலனையே அழிக்கக் கைகோர்த்திருக்கிறார்கள்.

**மகளிர் உரிமைத் தொகை, விடியல் பயணம், புதுமைப் பெண் போன்ற பொருளாதாரத் தன்னிறைவு திட்டங்களால் பெண்கள் முன்னேறி வருகிறார்கள். அதைத்தான் 'வெல்லும் தமிழ்ப் பெண்கள்' நிகழ்ச்சி மூலமாக தமிழ்நாடு அறிந்தது.**

**"கூலி வேலைக்குச் சென்று எனது குடும்பத்தை கவனித்து வந்தாலும் அந்தப் பணம் போதுமானதாக இல்லை. மாதம் எனக்கு ஆயிரம் ரூபாய் கிடைப்பது, பத்தாயிரத்தைப் போல இருக்கிறது. எனது எல்லாக் கஷ்டத்தையும் போக்கிய தமிழ்நாடு அரசுக்கு நன்றி"** என்று கண்கலங்கச் சொன்னார் மாதவி என்ற பெண்.

ஈழத்தில் இருந்து வந்த சாரா என்ற பெண், இலங்கை மக்களுக்காக அரசு சார்பில் கட்டிக் கொடுத்த வீடுகளைப் பற்றி பெருமையாகச் சொன்னார். முதலமைச்சரை 'அப்பா' என்று விளித்தார். அதை ஒரு கைக்குட்டையில் எம்பிராய்டு செய்து எடுத்து வந்து கொடுத்த காட்சி, மாண்புமிகு முதலமைச்சருக்கு கிடைத்த நற்சாட்சி ஆகும்.

**'நீங்கள் தைரியமாக முன்னேறுங்கள். உங்களை அழைத்துச் செல்ல இந்த அரசு இருக்கிறது'** என்றார் நடிகை ரோகினி. **'நீதிக்கட்சி ஆட்சி முதல் பெண்கள் முன்னேற்றத்துக்கு திராவிட இயக்கம் பாடுபட்டு வருகிறது'** என்பதை நடிகர் சத்யராஜ், இயக்குநர் ஞானவேல் ஆகியோர் பட்டியலிட்டார்கள். **'பெண்கள் மேடையேறிப் பேசியதுதான் திராவிட இயக்கத்தின் சாதனை'** என்றார் பட்டிமன்றப் பேச்சாளர் கவிதா ஜவஹர். **'தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், புரட்சியாளர் காரல் மார்க்ஸ் ஆகியோரின் குரலாக இருக்கிறார் நமது தோழர் மு.க.ஸ்டாலின்'** என்றார் இயக்குநர் ராஜு முருகன்.

மகளிர் சுய உதவிக்குழு மூலமாக தனது வெற்றி நிச்சயமாகி வருவதாக மாலா என்ற பெண் பட்டியலிட்டுச் சொன்னார்.

**'வீட்டை விட்டு வெளியே வராத நான், இன்று என் வாழ்க்கையில் முதல் தனிப் பயணத்தை சென்னையில் இருந்து தொடங்கி இருக்கிறேன். யாரின் துணையும் இல்லாமல் தனியாக வர முடிந்ததே முதலமைச்சர் ஸ்டாலின் கொண்டு வந்த திட்டங்களால்தான். இந்த விழாவில் என்னை பேச அழைத்த போது திருப்பரங்குன்றம் மலைமேல் ஏறி நின்று 'நா ஜெயிச்சுட்டேன் முருகா' என்று கத்திவிட்டு வந்தேன். எனக்கு தைரியம் தந்த முதலமைச்சருக்கு நன்றி"** என்று பேசினார் சரண்யா.

**தமிழ்ப் பெண்களை, வெல்லும் பெண்களாக மாற்றிய முதலமைச்சர்தான் இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.12.2025) தருமபுரி, பாப்பிரெட்டிப்பட்டியில் நடைபெற்ற, முன்னாள் அமைச்சர் முனைவர் பி.பழனியப்பன் – திருமதி ரோஜா தம்பதியரின் மகன் எழில்மறவன் மற்றும் வெ.சரவணன் திருமதி சாந்தி தம்பதியரின் மகள் கிருத்திகா ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்திவைத்து, மணமக்களை வாழ்த்தினார். இம்மணவிழாவில், அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மு.பெ.சாமிநாதன், இரா. இராஜேந்திரன், அர. சக்கரபாணி, மா.சுப்பிரமணியன், கூட்டணிக் கட்சித் தலைவர்கள் தொல்.திருமாவளவன், இரா.முத்தரசன், ஈ.ஆர்.ஈஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், மற்றும் பொன் குமார், தனியரசு மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.



தருமபுரி மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு பிறகு, நேற்று (14.12.2025) திருவண்ணாமலை மாவட்டத்தில் நடைபெறவுள்ள தி.மு.க. இளைஞர் அணி மண்டல நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள செல்லும் வழியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

## திருவாவடுதுறை டி.என்.ராஜரத்தினம் கலையரங்கில் இசைவிழா! இன்று

# 'முத்தமிழ்ப் பேரவை' விருதுகள்: முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி சிறப்புரை!

## இயக்குநர் பி. அமிர்தம் வரவேற்புரை! ஜி.ராமானுஜம் முன்னிலை!

சென்னை, டிச.15-

முத்தமிழ்ப் பேரவையின் இசை விழா - விருது வழங்கும் விழா இன்று (15.12.2025-திங்கள்) மாலை 5.30 மணிக்கு சென்னை 28, இராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள திருவாவடுதுறை டி.என்.ராஜரத்தினம் கலையரங்கில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் முத்தமிழ்ப் பேரவைச் செயலாளர் இயக்குநர் பி.அமிர்தம் அவர்கள் வரவேற்புரையாற்றுகிறார்.

முத்தமிழ்ப் பேரவைத் தலைவர் ஜி.ராமானுஜம் முன்னிலை வகிக்கிறார்.

இவ்விழாவில் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கி, கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விழாச் சிறப்புரையாற்றுகிறார்.

பத்மஸ்ரீ கலைமாமணி டாக்டர் சீர்காழி கோ. சிவசிதம்பரம் நன்றி கூறுகிறார்.

முன்னதாக மாலை 4.15 மணியளவில் மங்கள இசையுடன் தொடங்கும் இவ்விழாவில் கலைமாமணி வடுவூர் எஸ்.என்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி சிறப்பு நாதஸ்வரமும், வடுவூர் கி.தினேஷ்குமார் நாதஸ்வரமும், சங்கீத பூஷணம் நாங்கூர் செல்வகணபதி, பொள்ளாச்சி எம்.விஜயகுமார் ஆகியோர் தவிலும் வாசிக்கின்றனர்.

இவ்விழாவில் கலைஞர் விருதை - நடிகர் எம்.நாசரும், ராஜரத்னா விருதை - வடுவூர் எஸ்.என்.ஆர். கிருஷ்ணமூர்த்தியும், இயல் செல்வம் விருதை - திருவாரூர் புலவர் இரெ. சண்முகவடிவேலனும், இசைச் செல்வம் விருதை - காயத்திரி வேங்கடராகவனும், நாட்டியச் செல்வம் விருதை - திருமதி அனிதா குஹாவும் நாதஸ்வரச் செல்வம் விருதை - திருமெய்ஞானம் சகோதர்கள் டி.கே.ஆர். ஐயப்பன், டி.கே.ஆர். மீனாட்சி சுந்தரம் ஆகியோரும், தவில் செல்வம் விருதை - நாங்கூர் என்.கே. செல்வகணபதியும் மிருதங்கச் செல்வம் விருதை - தஞ்சாவூர் கே.முருக பூபதியும் பெறுகின்றனர்.

இவ்விழாவினையொட்டி 15,16,17, 18.12.2025 ஆகிய 4 நாட்கள் இசை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

இன்று (15.12.2025) இரவு 7.15 மணியளவில் நடைபெறும் இசை நிகழ்வில் இசைப் பேரொளி காயத்திரி வேங்கடராகவன் - பாட்டும், மைசூர் வி. ஸ்ரீகாந்தி - வயலினும் கலைமாமணி தஞ்சாவூர் கே. முருகபூபதி - மிருதகங்கமும் இசைக்கின்றனர்.

16.12.2025 அன்று மாலை 4.30 மணியளவில் நடைபெறும் இசை நிகழ்வில், நாதஸ்வர கலாநிதி கலைமாமணி கல்யாணபுரம் க.சீனிவாசன், சீ.தயாபரன், சீ.வேதகிரி ஆகியோர் சிறப்பு நாதஸ்வரமும், தவில் இசை மாமுரசு கல்யாணபுரம் க.ராஜன், கலைஞான திலகம் இஞ்சிக்குடி ரே.மணிகண்டன் ஆகியோர் சிறப்புதவிலும் இசைக்கின்றனர்.

மாலை 6 மணியளவில் அஸ்வத் நாராயணன் பாட்டும், எல்.ராமகிருஷ்ணன் - வயலினும் மிருதங்கச் செல்வம், சங்கீதகலாநிதி, கலைமாமணி முனைவர் திருவாரூர் பக்தவத்சலம் - மிருதங்கமும் முனைவர் டி.வி. வெங்கட சுப்ரமணியன் கடமும் இசைக்கின்றனர்.

இரவு 7.45 மணியளவில் பரதாஞ்சலி கலை இயக்குநர் கலைமாமணி திருமதி அனிதா குஹா - மாணவிகள் பரதநாட்டிய நிகழ்ச்சி நடை பெறுகிறது.

17.12.2025 அன்று மாலை 4.30 மணியளவில் நாதஸ்வர விசாரதா சிக்கல் எஸ்.வி.உத்திராபதி,கந்தன் குடி கே.பி. முருகானந்தம், நிர்த்தன மங்கலம் என்.ஆர்.கே.ஐயப்பன் ஆகியோரின் நாதஸ்வரமும், கலைஞான சிகரம் நீடாமங்கலம் ஏ.கே. கோவிந்தராஜன், தவில் இளம் சுடர் மணி நாகப்பட்டினம் பி.வீரமணிகண்டன் ஆகியோரின் சிறப்பு தவிலும் இசைக்கப்படுகிறது.

மாலை 6 மணியளவில் குமாரி ஹிமஜா சாம்ராஜ் - பாட்டும், சாகேத் பந்துலா - வயிலினும் பழனி பாலாஜி - மிருதங்கமும், ஜி.ஹரி கிஷோர் - கடமும் வாசிக்கின்றனர்.

இரவு 7.45 மணியளவில் கலைமாமணி குரு திருமதி. முத்தரசி ரவியின் கலைக்கோயில் நாட்டியப்பள்ளி வழங்கும் 'பெண்வழி மெய்ப்பாடு' நாட்டிய நாடகம் நடைபெறுகிறது.

18.12.2025 மாலை 5.15 மணியளவில் குரு திருமதி கிருஷ்ணபிரியா ஜெயகர் - சித்ரமாயா கலைக்கூடம் மாணவிகளின் பரதநாட்டிய நிகழ்ச்சி நடை பெறுகிறது.

இரவு 7 மணியளவில் இதயநிதி கயல்விழி, டி.ஆர்.சாம்பசிவன் ஆகியோர் வீனையும், அனுமந்தபுரம் பூவராகவன் - மிருதங்கமும், டி.வி. வெங்கடசுப்ரமணியம் கடமும் இசைக்கின்றனர்.

இரவு 8 மணிக்கு எம்.ஆர்.எம். நாடகமன்றம் வழங்கும் கண்ணகி - மதுரை எம்.ஆர்.எம்.பாலசுப்ரமணியம் குழுவினரின் இசை நாடகம் நடைபெறுகிறது.

இவ்விழாவில் அனைவரும் பங்கேற்று சிறப்பிக்குமாறு முத்தமிழ்ப் பேரவை அறக்கட்டளை விழா குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி

# கொல்லப்பட்டியில் 'என் வாக்குச்சாவடி -வெற்றி வாக்குச்சாவடி' ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் நடைபெற்றது!

ஒட்டன்சத்திரம், டிச. 15 -

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் மத்திய ஒன்றியத்திற்குட்பட்ட கொல்லப்பட்டியில் ஊராட்சி குட்டில்நாயக்கன் பட்டியில் வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் ஒட்டன்சத்திரம் தொகுதி தேர்தல் பார்வையாளர் பரணி கே. மணி ஒன்றியச் செயலாளர் எஸ்.ஆர்.கே.பாலு அவைத்தலைவர் செல்வராஜ், துணைச் செயலாளர்கள் சிவபாக்கியம் ராமசாமி, முருகானந்தம், மாவட்டப் பிரதிநிதி சண்முகம், நகர்மன்ற தலைவர் திருமலைச்சாமி பொறுப்பாளர் ராமசந்திரன்,

முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சுமதி வீரன்,

ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் மணிபாரதி, உள்ளிட்ட வாக்குச்சாவடி முகவர்கள் முத்து வேல், ராமசந்திரன், சர்க்கரை முஹம்மது, சந்திரன், பாலமுருகன், குணசேக ரன், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் பழனிசாமி, உள்ளிட்ட நிர்வாகி கள் கலந்து கொண்டனர்.

## 50 சதவீதம் வரி:

# மெக்சிகோவுக்கு இந்தியா எதிர்ப்பு!

டெல்லி, டிச. 15 -

தங்களுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்ளாத இந்தியா, சீனா, தென் கொரியா, தாய்லாந்து, இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீதான வரியை 50 சதவீதம் வரை உயர்த்துவதாக மெக்சிகோ அறிவித்துள்ளது.

இந்த வரி உயர்வு வரும் ஜனவரி மாதம் முதல் அமலாக உள்ளது. இந்நிலையில், ஒன்றிய வர்த்தக அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், மெக்சிகோவின் தன்னிச்சையான வரி உயர்வுக்கு தகுந்த எதிர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மெக்சிகோ உடனான நட்புறவை இந்தியா பெரிதும் மதிப்பதாகவும், முக்கிய வர்த்தக கூட்டாளியான மெக்சிகோவின் வரி உயர்வால் ஏற்படக் கூடிய தாக்கங்கள் குறித்து சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருடன் ஒன்றிய அரசு ஆலோசனை நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இராயபுரம் மேற்கு பகுதி 48வது வட்டத்தில் துணை முதல்வர் பிறந்தநாளை முன்னிட்டு வட்டச் செயலாளர் இரா.பாலன் ஏற்பாட்டில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி சிறப்பு உரையாற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கினார். மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., ஐட்ரீம் ஆர். மூர்த்தி எம்.எல்.ஏ., பகுதி செயலாளர்.வ.பெ.சுரேஷ் தலைமைச் செயல் செயற்குழு உறுப்பினர்கள் தா. இளையஅருணா, ந.மனோகரன் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.